தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1981, மே 7

சித்திரை 25, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'' நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.''

ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கம்பம் தொகுதியிலுள்ள சுருளி நீர்வீழ்ச்சி.

*வினா எண் 872— திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியிலுள்ள சுருளி நீர் வீழ்ச்சியில் மின்சாரத் துறையினரால் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் தண்ணீர்விட அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையிலே சில காலம் இந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் நிறுத்தப்பட்டிருந்ததாகச் செய்தி வந்ததின் காரணமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பார் என்று கருதுகிறேன். அவர்

இன்றைக்கு இல்லை. ஆனாலும், இந்த நீர்வீழ்ச்சியில் வரும் தண்ணீரை ஏழை எளிய மக்கள் வந்து பார்த்து பயன் அடைகிற வகையில் இருப்பதால், இந்த நீர்வீழ்ச்சியைப் பொருத்தவரையில், பொதுவாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருளி ஆற்றில் கட்டப்பட்டிருக்கிற அந்த அணைக்கட்டின் கீழே போடப்பட்டிருக்கும் குழாய்கள் அடியில் பாதுகாப்பாக இருக்கின்றன. இதன் மூலம் கோடைக் காலத்தில் அந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீர் விட வழி செய்யலாம். மற்ற காலங்களில் சுருளி ஆறு அணைக்குக் கீழே அந்த நீர் வீழ்ச்சிக்கு மேலே உள்ள நீர்பிடிக்கும் பகுதியிலிருந்து செல்கிற தண்ணீரே அந்த நீர் வீழ்ச்சிக்குப் போதுமானது. ஆகையினால் நீர் வீழ்ச்சிக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை.

திரு ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுருளியாறு போன்ற இப்படிப்பட்ட பிராஜக்ட் பகுதிகளில் வேலை செய்து முடிந்த பிறகு, மின்சார வாரியத்தினர், அவர்களுடைய வாரியத்திற்குச் சொந்தமான சில பொருட்களை ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் அல்லது இரும்புக் கம்பிகள், குழாய்கள் போன்றவற்றை அங்கேயே விட்டு விட்டுப்போய் விடுகிறார்கள். இதனால் சில சமயங்களில் ஆபத்தும் ஏற்படுகிறது. குறிப்பாக சுருளியாறு பிராஜக்டில்...... (பணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வி சுருளி ஆற்றில் கட்டப்பட்ட நீர்வீழ்ச்சியிலிருந்து தண்ணீர் வருவதை மின்சாரத் துறை நிறுத்தியுள்ளதா என்பதைப் பொறுத்தது. நீங்கள் கேட்பதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. வினாவாக கேட்டு முடிப்பதாக இருந்தால் தொடர்ந்து கேளுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள்.

திரு ரா. கிருஷ்ணன்: அப்படிப்பட்ட தகராறு ஏற்படக் கூடிய சில நேரங்களிலும் அங்கே பாயக்கூடிய மின்சாரத்தைத் தடை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அது பற்றி அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அளவிற்குப் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு அவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு அரசு உத்தரவு இடும்.